விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 3 ஜுல்கஜ் 22 இதழ் 217
யாழ்ப்பாணம் புதன்கிழமை 19-9-84

அரசியல் தீர்வுக்கு யாழ். சட்டத்தரணிகள் வலியுறுத்து!

[யாழ்ப்பாணம்]

தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற தீர்மானம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த வடபகுதிசட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

யாழ் சட்ட நூலகத்தில் யாழ் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம், மல்லாகம் ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, பருத்தித்துறையைச்சேர்ந்த சட்டத்தரணிகள் கலந்து கொண்டனர்

நண்பகல் ஆரம்பமான இக்கூட்டம் சுமார் 3 மணிநேரம் வரை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிழக்கானும் தீர்மானமும் நிறைவேறியது.

''பயங்கரவாத தடைச் சட்டத்தையும் அதன் திருத்தத்தையும் ரத்துச்செய்ய வேண்டும்.

''வடக்குக் கிழக்கில் மோசமடைந்துவரும் நிலைமைகளுக்கு அரசின் ஆயுதப்படையினரே காரணமாக இருப்பதால், உடனடியாக ஆயுதப்படையினரை அப்பகுதிகளிலி

(8-ம் பக்கம் பார்க்க)

● 17 பிரயாணிகளுக்கு நேற்று ஏற்பட்ட திகில் அனுபவம்

மாங்குளத்தில் திசை திருப்பி பத்திரமாகத் திருப்பிய பஸ்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டு வந்த தனியார் பஸ்வண்டியொன்று, மாங்குளம் உப தபாலகத்துக் கருகில் முல்லைத்தீவு நோக்கி மாலை நான்கு மணியளவில் திசை திருப்பப்பட்டது. ஆனாலும் அதில் பயணஞ் செய்த பயணிகளோ, அல்லது இந்த பஸ்வண்டியோ எதுவித பாதிப்புக்குமுள்ளாகவில்லை!

நேற்றுக்காலை எட்டரை மணியளவில் மேற்படி தனியார்பஸ் வண்டி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது. மாலை 4 மணியளவில் பஸ்வண்டி மாங்குளம் முகாமையடுத்துள்ள உப தபாலகத்துக்கருகில்

(8ம் பக்கம் பார்க்க)

தேசிய சேமிப்பு வங்கி

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசியசேமிப்பு வங்கி குருநகரில் இன்று இயங்க விருந்த போதிலும் பணம் வைக்கும் இரும்புப்பெட்டிகள் கொழும்பிலிருந்து வந்து சேராததால் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்க மேதமது கொடுப்பனவுகளை ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய சேமிப்பு வங்கிஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து இரும்புப்பெட்டிகளை யாழ்ப்பாணத்துக்கு வரவழைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் மேற்கொண்டுள்ளார். (மா)

பொதுப் பரீட்சைகளை முன்னிட்டு டிசம்பர்வரை பகிஷ்கரிப்பு இல்லை!

யாழ். மாணவர் பிரதிநிதிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் நடத்தப்படும் பொதுப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறப் போவதை முன்னிட்டு, இவ்வருடம் டிசம்பர் மாதம் வரை பகிஷ்கரிப்புப் போன்ற நடவடிக்கைகளை ஒத்திவைப்பது என்று யாழ். மாணவர் பிரதிநிதிகள் கூடி முடிவுசெய்துள்ளனர்.

இது சம்பந்தமாக மாணவர் பிரதிநிதிகள் நேற்று விடுத்துள்ள அறிக்கையில்; பகிஷ்கரிப்புக்களைக் கைவிட்டு, பாடசாலைகளுக்குச் சென்று வகுப்புக்களுக்குச் சமூகமளிக்குமாறு மாணவர்களுக்குவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

''கல்வி எமது பிறப்புரிமை'' என்ற தலைப்பிட்டு அவர்கள் விடுத்துள்ள மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''யாழ் பிராந்திய சகல பாடசாலை பிரதிநிதிகளும்ஒன்றுகூடி பல தீர்மானங்களை எடுப்பதாக இருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணங்களால் அங்ஙனம் ஒன்றுகூட முடியவில்லை

[8-ம் பக்கம் பார்க்க]

"வடக்கில் தொடரும் பீரங்கித் தாக்குதல்கள்!"

யாழ்.பிரஜைகள்குழு ஜனாதிபதிக்கு தந்தி

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கடல் பிராந்தியப்பகுதிகளில் தொடர்ந்து எக்காரணமுமின்றி பீரங்கித் தாக்குதல்கள் நடைபெறுவதை கடுமையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனவுக்கு, யாழ். பிரஜைகள்குழு நேற்று அனுப்பிவைத்த தந்தியில் தெரிவித்துள்ளது.

அந்தத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இம் மாதம் 15ம் திகதி இரவு 8 மணிக்கும், நள்ளிரவுக்கு மிடையில், இந்தப்பகுதிகளில் பிரங்கித்தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் இளம் கர்ப்பிணி கொல்லப்பட்டு சிலர் காயமடைந்ததுடன், வீடுகளும், வழிபாட்டு ஸ்தலங்களும் சேதமடைந்துள்ளன. இத்தகைய மனிதாபிமானமற்ற செய்கைகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (க)

பிரபல கல்லூரி மாணவன் கடத்தப்பட்டார்!

[கல்வியங்காடு]

யாழ் பிரபல கல்லூரி மாணவன் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம், நல்லூர், அம்மன் வீதியில் வசிக்கும் யோகரட்ணம் கருணாகரன் [வயது 17] என்ற மாணவனே இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல கல்லூரியில் க.பொ.த. உயர் வகுப்பில் படிக்கும் இம் மாணவன் தனது வீட்டில் இருந்த போது வர்த்தக ஸ்தாபன மொன்றுக்குச் சொந்த

(8ம் பக்கம் பார்க்க)

முன்னாள்மேயர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். மாநகர முதல்வர் திரு. எஸ். எஸ். நவரெத்தினம் காலமானார்.

(8ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில் இளைஞர்கள் விசாரணை

பாடசாலைகளும் இயங்கவில்லை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி நகரப் பகுதிகளில் திடீர் சோதனை நடத்திய இராணுவத்தினர், பல இளைஞர்களை விசாரணைக்காக அழைத்துச்சென்றதாகத் தெரிகிறது

கிளிநொச்சியில் நேற்று கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன.

காலையில் சந்தை கூடியதும் பலர் 'ட்ரக்'களில் வந்திறங்கியதும் அங்கிருந்த மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர் பாடசாலைகளில் மாணவர் சமூகமளிக்காததால் நண்பகலுடன் பாடசாலைகள் மூடப்பட்டன.

எம். ஜி. ஆர். ஒரு நாள் காலக்கெடு!

(தஞ்சாவூர்)

''எனக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகச் சில வெளிநாட்டுச் சக்திகள் குறிப்பிட்டுள்ளன எனக்கோ அல்லது எனது அமைச்சர்களுக்கோ அல்லது வேறு தமிழ் நாட்டு அரசியல்தலைவர்களுக்கோ ஆபத்து ஏற்பட்டால் அதன் விளைவுகள் இருபத்து நான்கு மணி நேரத்தில் தெரியவரும்!'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் எச்சரித்துள்ளார்.

மாமன்னன் இராஜராஜ சோழன் 1000 வது ஆண்டு முடிவு விழாவில் நிறைவுச் சொற்பொழிவாற்றிய போதே முதலமைச்சர் மற்கண்டவாறு குறிப்பிட்டார்.

[8-ம் பக்கம் பார்க்க]

அமிர், சிவா இந்திராவைச் சந்தித்தனர்

(கொழும்பு)

தமிழ்நாடு சென்றிருந்த தமிழர் விடுதலை கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ.

(8ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்ப

[8ம் பக்கம் பார்க்க]

அரசாளங்பரம்

விற்பனைக்கு

Cross Broilers 4/50 சேவல் குஞ்சு 1/90. ராதாகிருஷ்ணஸ் 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார் கோவில். 1804

GTO மொடல் நல்ல நிலையிலுள்ள காவசாகி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. Dr. R. பாக்கியநாதன், 464, பீச்ரோட், யாழ்ப்பாணம். 1811

தஞ்சாவூர் புதிய வீணைகள் விற்பனைக்கு வந்துவிட்டன. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளலாம். திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன் வீதி, நல்லூர். 1812

மீசாலை, புத்தூர் சந்திக்கு அண்மையில் சிற்றம்பலம் வீதியில் 18பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:வே.குமாரமூர்த்தி, குமாரவாசம், மீசாலைதெற்கு. 1817

மானிப்பாயில் புன்னாலை ரோட் (9வது KM Field Unit) முன்னாலுள்ள காணியில் 4 பரப்பு வீடு கட்டக்கூடியகாணி உடனடியாகவிற்பனைக்குண்டு. தொடர்பு: த. நடராசா, புன்னாலை வீதி, மானிப்பாய். 1789

கைதடிச் சந்தியிலிருந்து ¼ மைல் தூரத்தில் கிணறு, மின்சார வசதியுள்ள புதிய வீட்டுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நியூ புவனேஸ்வரி மெடிக்கல் ஸ்ரோர்ஸ், 69, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 1809

கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதியில், மின்தறி நெசவுசாலைக்கு அருகில் சகல வசதிகளுடன் அமைந்த வீடும் நான்கு பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. கோபாலன்[லோயர்]இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில். 1803

கண்டி ரோட், பெந்திகோஸ்ரல் சபை முன் ஒழுங்கையில் வலது பக்கம், இரண்டாவது காணி 15.6 குழி. மூன்று பக்கமும் மதிலும், குழாய் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு 12, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1799

யாழ். வளாக தபால்பெட்டி ஒழுங்கை முகப்புடன் கூடிய சுற்றுமதிலும் உடைய நான்கு பரப்புகாணி முழுமையாகவோ பகுதியாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு: து ஆனந்தராஜா, பரமேஸ்வரா ஒழுங்கை, (தபால் பெட்டி ஒழுங்கை), திருநெல்வேலி. 1795

தேவை

நல்ல அனுபவமுள்ள கார்ச் சாரதிக்கு வேலை தேவை. 35 வருடமாக சாரதி லைசென்சில் குற்றப்படவில்லை. சின்னையா, மதருஸ் யுவலறி மாட்,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். 1796

வீட்டில் உள்ள பெண் பிள்ளைகளுக்கு உதவியாக இருப்பதற்கு வயோதிபமாது தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 1760, C/O, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1760

பற்பொடி, சீயாக்காய், பவுடர், சாந்து பொட்டு, தயார் செய்வதற்கு பெண்கள், ஆடர்கள் சேகரிப்பதற்கு ஆண்கள் தேவை. தங்குவதற்கு இட வசதி உண்டு. டேவாஸ் இன்டஸ்ற்றி, 141 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1816

குத்தகைக்கு

கிளிநொச்சியில் நீர்ப்பாசன வசதியுடன் 50 ஏக்கர் நெற்காணி பெரும்போக செய்கைக்கு குத்தகைக்கு உண்டு. தொடர்பு: சொ. கோபாலசிங்கம், குமரகோட்டம், கோண்டாவில். 1770

CLASSES

I C. M. A. and Institute of Banking for May 1985 Exam. Classes October to March 1985. Past papers classes April to may 1985. Radhakrshna's 392, Navalar Road, Kailasapillayar Kovil. 1815

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
ஏலவிற்பனை அறிவித்தல்

பாவித்துக் கழிக்கப்பட்ட பழைய அலுமினியம் மின்குமிழ்க் கட்டைகள், மரப்பெட்டிகள், கேபிள் என்ட் பெட்டிகள்,மோல் துண்டுகள், உடைந்த ஆர் சீ.கம்பங்கள், மின்சாரப் பொருட்கள் முதலியன 25-09-84 ஆம் திகதி முற்பகல் 9-00 மணியளவில் மாநகராட்சி மன்ற களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில்விற்கப்படும். கூடியகேள்விக்காரர்கள்உடன் பணத்தைசெலுத்தி பொருட்களை எடுத்துச்செல்ல வேண்டும்.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14-09-1984. 1814

அந்தச்சடலம் அரசசெலவில் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் அடையாளம் காணப்படாத நிலையிலிருந்த சடலம், நேற்று அரசசெலவில் அடக்கம்செய்யப்பட்டது.

கடந்த 4ம் திகதி திருநெல்வேலிச்சந்திக்கண்மையில் தந்திக்கம்பமொன்றில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இனந்தெரியாத நபர் இறந்த நிலையில் கட்டிவைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

யாழ். நீதிமன்ற நீதவானின் உத்தரவுப்படி, அரசசெலவில் இச்சடலம் அடக்கம்செய்யப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது.(மா)

இலங்கை கப்பல் குவைத்சென்றது

(கொழும்பு)

ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கான ''ரோயல் கொழும்பு'' என்ற எண்ணெய்த்தாங்கிக்கப்பல் தற்போது திருத்த வேலைகளுக்காக குவைத் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இக்கப்பலில் ஏற்றிவரப்பட்ட மசகு எண்ணெயை வேறொரு கப்பலில் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உள்நாட்டில் ஏற்படவிருக்கும் எண்ணெய்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக சிங்கப்பூரிலிருந்து டீசல் எண்ணெய் பெறப்படவுள்ளது.

கனகபுரம் வித்தியாலய

விடுதிக் கட்டிடம் தீப்பிடித்துச் சேதம்

நாசவேலை காரணமா?

(நமது கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி கனகபுரம் கனிஷ்ட வித்தியாலயத்தின் பிரதான விடுதிக்கட்டிடம் தீப்பிடித்துக்கொண்டதால் பலத்த சேதமடைந்தது.

அக்கட்டிடத்தில் மாணவர்களுக்கு விநியோகிக்கவென வைக்கப்பட்டிருந்த சுமார் 75 பிஸ்கட்பெட்டிகளும், விடுதித் தளபாடங்களும் தீயில் கருகி நாசமாகின.

கனகபுரம் பாடசாலை விடுதிக்கட்டிடத்தில் பரவியதீ நாசகாரச் செயலாக இருக்கும் என கருதப்படுகிறது.

விடுதிக்கட்டிடத்தின் பெரும்பாலான பகுதிகள் தீப்பிடித்துச்சேதமாகியுள்ளன.

பண்டத்தரிப்பில் ஓய்வூதியம்

கிராமிய வங்கிமூலம் வழங்க நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இம்மாதத்திற்கான ஓய்வூதியப் பணத்தை பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கி மூலம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பண்த்தரிப்பு ஓய்வூதியம் பெறுவோர் கூட்டுறவு நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் திரு. அ. வ. துரையப்பா யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கும், வடகுதி தபால் சேவை அத்தியட்சகருக்கும் அனுப்பிவைத்துள்ள அவசர மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மாத ஓய்வூதியப் பணம் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் வைத்து வழங்கப்பட்டபோது மிகவும் வயோதிபநிலையில் உள்ள ஓய்வூதியம் பெறுபவர்கள் அடைந்த கஷ்டங்கள் வேதனைகள் பற்றியும் இம்மகஜரில் விளக்கமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இம்மாதம் தொடக்கம் இந்த ஓய்வூதியப்பணத்தை பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கி மூலம் வழங்கி உதவினால் இப்பகுதி ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்குமென்றும் திரு. துரையப்பா இம்மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாருடையது?

அளவெட்டியைச் சேர்ந்த திரு. தம்பிப்பிள்ளை ஆறுமுகத்தின் அடையாளஅட்டையைத் திரு. கே. சிவகுமாரனும், கோவில் வயல் திரு முத்தையா ஜெயலிங்கத்தின் அடையாள அட்டையை திரு இ. வினாயகமூர்த்தியும் திருமலை திருமால் வீதியைச்சேர்ந்ததிரு நடராசா கருணாநந்தனுடைய அடையாள அட்டையையும் ஒரு தொகை வெளிநாட்டுப்பணத்தினையும் டாக்டர் வி.எஸ் வல்லிபுரமும், நாலுதிறப்புக்கள் கொண்ட கோர்வையை திரு எம். ஏ. முனாவ்வும் கண்டு எடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பிரசுரம் மூலம் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ விடுதலைத் தீவிரவாதிகள்' இயக்கத்தின்[ரெலி] தலைவர் ஜெகனுக்கு அஞ்சலி செலுத்தி துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் பொன்னாலை என்னும் இடத்தில் கடந்த 9-ம் திகதி தாக்குதல் நடவடிக்கை ஒன்றை எதிர்கொண்டிருந்த வேளையில் தோழமை இயக்க உறுப்பினர்களால் இனங்கண்டு கொள்ள முடியாத நிலையில் நடந்த சம்பவத்தில் மரணமானார் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் அப்பிரசுரத்தில், ஜெகன் தலைமையில் லொறியினால் அரசபடையினரது வாகனத்தை தாக்கி ஆயுதங்கள் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சி; மானிப்பாயில் பொலிசாரது வாக்கி டோக்கி பறிமுதல்; யாழ். அதிரடிப்படையினரை தாக்கி ஆயுதங்கள் கைப்பற்றியமை வங்கி பாதுகாப்பு ஊழியரிடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல்; சின்னக்கடை பொலிஸ் ஜீப்கடத்தப்பட்டு குண்டு வைத்து தகர்ப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டதாக உரிமைகோரியுள்ளனர். (மா)

விற்பனை நடக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலுள்ள எரிபொருள் நிலையங்களில் நேற்று பெற்ரோல் விற்பனைசெய்யப்படவில்லை. சில எரிபொருள் நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. [க]

சங்கானை
ப. நோ. கூ. சங்க
புதிய முகாமையாளர்

(சுழிபுரம்)

திரு. வி. துரைசிங்கம் யாழ் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரால் சங்கானை ப. நோ. கூ.சங்கத்தின் பிரதமமுகாமையாளராகப் பதவிஉயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தின் பத்திரிகைக் கலைத்துறை டிப்ளோமா பட்டதாரியான இவர் பல பேச்சுப் போட்டிகளிலும், எழுத்துப் போட்டிகளிலும் முதலிடத்தைப்பெற்றுள்ளார்.

சென்ற பலவருட காலமாக நஷ்டத்தில் இயங்கி வந்த சங்கானை கிராமிய வங்கியின் முகாமையாளர் பதவியை இவர் பொறுப்பேற்று தன்னுடைய கடும் உழைப்பால் பல வழிகளில் வங்கியை இலாபகரமாக இயக்கி மேலதிகாரிகளின் பாராட்டையும் பெற்றார்.

டிப்ளோமா பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளராகிய இவர் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, கனிஷ்ட பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பழைய மாணவர். பண்ணாகத்தைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் திரு. விசுவலிங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

மணமகள் தேவை

எங்களுக்கு நல்ல அழகும், நிறமும், குணமும் உள்ள கௌரவமான சைவசமய வேளாள குடும்பத்து 26-30 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. யாழ்ப்பாணத்தில் வீடு அல்லது காணி வேண்டும். மணமகன் பிரபல நிறுவனம் ஒன்றில் நல்ல சம்பளத்தில் உத்தியோகம் பார்க்கிறார். குறிப்புடன் புகைப்படமும் அனுப்பி வைத்தால் நன்று. பொருந்தாவிடத்து கண்ணியமாக அனுப்பி வைக்கப்படும். விளம்பர இல: 1780 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 1780

றீகன்-குரோமிக்கோ பேச்சு:

ஐ. நா. செயலாளர் மகிழ்ச்சி!

39-வது கூட்டத்தொடர் ஆரம்பம்!

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி றெனால்ட் றீகனுக்கும் சோவியத் வெளியுறவு அமைச்சர் அந்ரி குரோமிக்கோவுக்கு மிடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெறவிருப்பது குறித்து ஐ. நா செயலாளர் நாயகம் திரு. ஜாவியா பெரஸ்டி கொய்லர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பொதுச் சபையின் 39-வது கூட்டத் தொடர் நியூயோர்க்கில் நேற்று ஆரம்பமானதை யொட்டிக் கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

''உலகில் அணு ஆயுத அச்சுறுத்தல்களும், வல்லரசுப் போட்டிகளும் அதிகரித்து வரும் ஒரு நிலையில் இருபெரும் வல்லரசுத் தலைவர்கள் நீண்ட நாட்களுக்குப் பின்னர் பேச்சு வார்த்தை நடத்தவிருப்பது ஓரளவு முன்னேற்றமான நிகழ்ச்சியாகும்'' என்றார் அவர்.

''தற்போது அணு ஆயுதப் பேரழிவு நிலை உலக மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. இந்த அழிவு நிலையிலிருந்து உலகைப் பாதுகாப்பதற்கு இந்த இரு தலைவர்களும் தமது பேச்சு வார்த்தையில் இணக்கம்காணப்படவேண்டும்'' என்றும்அவர் தெரிவித்தார்.

நேற்றுத் தொடங்கிய ஐ. நா.வின் 39-வது கூட்டத் தொடரில் மேற்காசியப் பிரச்னை, ஈரான் - ஈராக் யுத்தம், மத்திய அமெரிக்க நெருக்கடி, நமீபியாவின் சுதந்திரம், சர்வதேச பதட்டநிலைபோன்ற பல்வேறு விடயங்கள் குறித்து விவாதம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(சூ)

சீன-இந்திய எல்லைப் பேச்சுக்கள் சுமுகமாக நடந்தது!

பீக்கிங் செப். 18,

சீன - இந்திய எல்லைப் பிரச்னை தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அதிகாரிகள் நிலையில் நேற்று பீக்கிங்கில் நடைபெற்றது.

இருநாடுகளும் நீண்ட காலமாக இருந்து வரும் எல்லைப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணுவதற்கு முழுஅளவில் இணங்கியுள்ளதாகத் தெரிகிறது.

வர்த்தகத்துறையிலும் இருநாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைக்கவும்தமது வர்த்தகத்தை பெருக்கிக் கொள்ளவும் இணங்கியுள்ளன. அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் இந்த இருநாடுகளுக்கிடையும் 1000 டொலர் தொகையில் வர்த்தகம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருநாடுகளும் கலாச்சாரம் மற்றும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பதற்காக நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பேச்சு வார்த்தையில் இந்திய தரப்புக்கு வெளியுறவு அமைச்சின் செயலாளர் நர்வத்சிங்கும் சீனாவின் சார்பில் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சின் செயலாளரும் தலைமை தாங்கினர். (சூ)

புதிய கவர்னர்கள்

(புதுடில்லி)

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் லெப்டினட் கவர்னராக ரி.பி. திவாரி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் உத்திரப்பிரதேச மாநிலத்தின் தலைமைச் செயலராக இருந்தவர்.

கோவா டயூ டாமன் பிரதேசத்தின் லெப்டினட்கவர்னராக கோபாலசிங் நியமிக்கப்பட்டுளளார். (சூ)

இஸ்ரேலில் புதியகட்டுப்பாட்டு

பொருளாதாரக் கொள்கை அமுல்!

ரெல்அவிவ், செப். 18

இஸ்ரேலின் புதிய கூட்டரசாங்கம் தனது நாட்டின் பொருளாதார மீட்சிக்காகப் பல இறுக்கமான பொருளாதாரக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்துள்ளது.

இஸ்ரேலின் நாணயப் பெறுமதி இறக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் நாட்டின் ஏற்றுமதிகள் அதிகரிக்கப்பட்டு, இறக்குமதிகள் குறைவடைவதன்மூலம் செல்மதி நிலுவைப் பிரச்னையைச் சரிக்கட்டமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது அத்துடன் பல ஆடம்பரப் பொருட்களுக்குக் கூடுதலான விற்பனை வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

வரவிருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க செலவீனங்கள் 1000 கோடி அமெரிக்க டொலரினால் குறைக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் மிகக் கூடுதலான பணவீக்கம் செல்மதி நிலுவைப் பிரச்னை என்பவற்றைக் கருத்திற் கொண்டே புதிய பிரதமர் சீமான் பெரஸ் இந்தக் கட்டுப்பாட்டுப் பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப் படுத்தியுள்ளார்.

தொழிற்சங்கங்கள் பலவற்றின் ஆதரவைக்கொண்டிருக்கும் தற்போதைய தொழிற்கட்சிக் கூட்டரசாங்கத்தின் இக் கொள்கைகளைத் தொழிற்சங்கங்களும், மக்களும் ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஆயினும் இக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டவுடனேயே பெற்ரோலியப் பொருட்களின் விலைகள் 10 சத வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (சூ)

பருத்தித்துறை பிரஜைகள் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரஜைகள் குழுக்கூட்டம், பருத்தித்துறை சிவன் கோவில் பார்வதபத்தினி மண்டபத்தில் இம்மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

பருத்தித்துறை நகர்ப்புறத்திலும், சந்தையைச் சுற்றியுள்ள கடைகளை நடாத்தும் வர்த்தகர்கள் அனைவரும் இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்

இதுவரை நடந்தசேதங்கள் பற்றியும், இனிமேல் இப்படியான சம்பவங்கள் நடக்காதபடி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது. (க)

கனடாவில் புதிய பிரதமர் மல்ரோனி பதவி ஏற்றார்

ஒற்ரூவா, செப். 18

கனடாவின் 18-வது பிரதம மந்திரியாகக் 'கன்சர்வேட்டிவ்' கட்சியைச் சேர்ந்த பிரயின் மல்ரோனி பதவி ஏற்றுள்ளார்.

அண்மையில் கனேடியன் பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் இவரது கட்சி வெற்றிபெற்றமையைத் தொடர்ந்து இவர் பிரதமரானார்.

கனடாவின் முன்னாள் பிரதமர் ஜோக் கிளாக் வெளியுறவு அமைச்சராகவும், மைக்கல் வில்லியம் நிதியமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர்

(சூ)

புதியபொருளாதாரமுறைமை வர்ளமுக நாடுகள் தடை!

இந்தியா குற்றச்சாட்டு

(ஜெனீவா)

மூன்ரும் உலகநாடுகள் புதிய பொருளாதார முறைமை ஒன்றை ஏற்படுத்துவதற்குச் சில வளர்முக நாடுகள் தடையாக இருந்து வருகின்றன என்று ஜெனீவாவில் நடைபெற்ற அங்டாட் கூட்டத் தொடரில் பேசிய இந்தியப் பிரதிநிதி தெரிவித்தார்

''அங்டாட் அமைப்பின் கோட்பாடுகள் பின்பற்றப்பட்டிருந்தால் அல்லது அதனை மேற்கு நாடுகள் ஒப்புக்கொண்டிருந்தால் தற்போது உலகில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளையோ மூன்ரும் உலக நாடுகளின் வறுமைப் பிரச்னையோ ஏற்பட்டிருக்கமுடியாது. மாரூக வறிய நாடுகள் பொருளாதாரத் துறையில் மீட்சி பெற்றிருப்பதோடு சர்வதேசப் பொருளாதார நிலையும் மேம்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அங்டாட் ஸ்தாபனம் சில அரசியல் பிரச்னைகளின் தளமாகமாறி வருகிறது என்று சில வளர்முக நாடுகள் தெரிவித்த குற்றச்சாட்டினை அங்ராட் செயலாளர் நாயகம் திரு. காமினி கொரியா மறுத்துள்ளார். இந்த ஸ்தாபனம் வளர்ந்த - வளரும் நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்புக்கு முயன்று வருவதோடு முழுமையாகப் பொருளாதார விடயங்களுக்கே முன்னுரிமை அளித்து வருகிறது'' என்றும் குறிப்பிட்டார். (சூ)

மட்டு. வாவி ஆழமாக்கல் வேலைகள் இடைநிறுத்தம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வாவி ஆழமாக்கும் பிரிவில் அண்மையில் ஏற்பட்ட மோட்டார் படகு இயந்திரங்கள் கொள்ளையடுத்து வாவி ஆழமாக்கும் வேலைகள் இடைநிறுத்தம்செய்யப்பட்டுள்ளன.

இவ்வேலைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டதை யடுத்து வாவி ஆழமாக்கும் இயந்திரத்தின் உபகரணங்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

துரையப்பாவிளையாட்டரங்கில்ஓய்வூதியம் நீண்டநேரம் கியூவில் நின்ற பெண் மயங்கி விழுந்தார்:

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்றுமுன்தினம் ஓய்வூதியம் பெறுவதற்காக நீண்டநேரம் காத்திருந்தவர்களில் எஸ். தையல்முத்து என்ற பெண் மயங்கி வீழ்ந்தார். அருகிலிருந்தவர்கள் முதலுதவி அளித்து 'சோடா' பானம் கொடுத்தார்கள்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 6 மணி முதலே, தூர இடங்களிலிருந்து வயோதிபர்கள், பெண்கள் உட்பட அநேகர் கூடத்தொடங்கினர்கள்:

சுகவீனமுற்ற ஓய்வூதியக்காரர்கள் தங்கள் ஊர்களில் இருந்து 12 கார்களில் வந்திருந்தனர் சுமார் 500க்கும் மேற்பட்ட சைக்கிள்கள் முனியப்பர் கோவிலுக்கு முன்னுள்ள ஆலமரத்தின்கீழ் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

யாழ். மாநகரசபை ஊழியர்கள் ஓய்வூதியம் பெறவந்தவர்களுக்குக் குடிநீர் வழங்கினர்கள்.

நேற்று ஓய்வூதியம் பெறுவோர் நீண்டநேரம் காத்து நிற்க வேண்டியிருந்தது

முதலில் எல்லோரும் மைதானத்திற்குள் வரும்படி அழைக்கப்பட்டனர். பின்னர் வெளியில் செல்லும்படி கேட்கப்பட்டனர்.

தபால்நிலையம் ஒன்றில் சிலர் 'வவுச்சரில்' கையெழுத்திட்டதாகவும் அவர்கள் நேராக வந்து ஓய்வூதியம் பெற முயற்சித்தபோது, அங்கு அதிகாலை முதல் காத்திருந்தவர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்ததாகவும் இதனால் தாமதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சிலர் சுமார் 6மணி நேரத்திற்கு மேலாக அங்கு காத்து நின்றனர். நண்பகலுக்குப்பின்னரும்அங்கு நீண்டகியூ காணப்பட்டது.

சிலவயோதிபர்கள் களைப்பினால், துரையப்பா விளையாட்டு அரங்குப் படிகளில் படுத்திருந்தனர்.

விளையாட்டு அரங்கு முழுவதும் நேற்று ஓய்வூதியக்காரர்களாலும் அவர்களுக்கு உதவிக்கு வந்தவர்களாலும்நிரம்பி வழிந்தது.

தபாலக ஊழியர்கள் சுறுசுறுப்பாக இயங்கி அத்தனை பேருக்கும் ஓய்வூதியம் வழங்கினர்கள். (க)

கட்டிட வேலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட அபிவிருத்திச் சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலக உப மின் நிலையத்தின் கட்டிட வேலைகள் துரித கதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

யாழ், அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் மேற்கொண்ட துரித முயற்சியினாலேயே இக்கட்டிட வேலைகள் துரிதமாகப் பூர்த்தியடைந்தது.

★ அமெரிக்கா ★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!

AIR-TRANSIT

TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

மணிவாக்கு

ஆழ்ந்த ஆன்மிக உண்மைகள் என்பவை எப்போதுமே வெளியில் சொல்ல முடியாதவை. தீர்க்கதரிசிகள் தங்களுடைய நாக்கினால் பேசுவதில்லை. வாழ்க்கையின் மூலமாகவே பேசுகிறார்கள்.

— மகாத்மாகாந்தி

நமது நோக்கு

இரண்டாட்டம் வேண்டாம்

வட அயர்லாந்தில் 15 வருடங்களாகத் தொடர்ந்துவரும் இரத்தக் களரியை முடிவுகட்ட முனைந்திருக்கிறார் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மாகிரட் தாட்சர்.

பிரதமரின் கடந்த ஆட்சியில் 'இரும்புப் பெண்' என்ற இலட்சணத்துக்கு ஏற்ப அந்நாட்டில் நிகழ்ந்த கொடுமைகள் எதற்கும் அவர் அஞ்சவில்லை. வட அயர்லாந்துக்குப் பொறுப்பான 57வயதுடைய அமைச்சர் ஜேம்ஸ் பிரயரின் சொல்லே செல்லவேண்டுமென்ற பிடிவாதம் கொண்டிருந்தார் பிரதமர் தாட்சர்.

அடுத்த கன்சவேட்டிவ் பிரதமராக வரத் தகுதியுற்ற அமைச்சர் பிரயரை இந்த 'சக்கடத்தார் குதிரை' தூக்கி எறிந்துவிட்டது.

அரசியல் ஆளுமைக்கு ராஜதந்திரம் மிக முக்கியமானதென்பதை இன்றைக்காவது உணர்ந்த தாட்சர் திரு. டக்ளஸ் (லியன கே அல்ல) கேர்ட் என்ற ஒரு உதயதாரகையை இந்தப் பணிக்கு நியமித்திருக்கிறார்.

எறும்பு ஊர இரும்பு தானும் குழியும். 15 வருட காலம் அடிக்குமேல் அடி விழும் வட அயர்லாந்தில் அமைதி நிலவ வேண்டும் என்ற ஆவல் இந்த வணங்காமுடியன்(ள்) என்ற பெயர்பெற்ற பிரதமர் தாட்சரைப் பிடித்திருக்கிறது.

எவ்வித தயக்கமுமின்றி ஒரு வருடத்துக்குள்ளே அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தி புதிய அமைச்சருக்கு இச் சுமையை ஏற்றியிருக்கிறார்.

அமைச்சர் பிரயரின் வருங்காலம் முற்றுப்பெற்றது; அதற்காகக் கட்டி அழுவதா அல்லது ஆயிரக்கணக்கில் நடந்த உயிர்ப்பலியை உடனடியாக நிற்பாட்டுவதா?

மூன்று வருடம் இப்பதவியில் இருந்த திரு. பிரயர் நக்கீரர் போல் நெற்றிக் கண்ணுக்கு அஞ்சாதவர். இரும்பும் இரும்பும் மோத வேண்டிய கட்டம் வந்தால் அதற்கும் தயாரானவர்; இந்த 'நரகத்து முள்ளுக்குள்' அகப்பட்டும் வட அயர்லாந்தில் போராடும் இருசாராருடைய மதிப்பையும் இழக்கவில்லை. இருந்தும் எடுத்துக் கொண்ட பொறுப்பை நிறைவேற்ற முடியவில்லை.

வடஅயர்லாந்தில் பெரும்பான்மையானவர் புறட்டெஸ்தாந்திகள். கத்தோலிக்கர் சிறுபான்மையவர். இவ்விருசாராருக்கும் அதிகாரம் பங்கிடும் பணியில் அவர் தோல்வி கண்டதால் அதில் தொடர்வதில் பயனில்லையென்று பிரதமர் முடிவு செய்துள்ளார்.

வட அயர்லாந்து இங்கிலாந்துக்கு ஒரு புராதனத் தலைவலியாக இருந்து வருகிறது. பிரதமராக முன்னரே சேர்ச்சில் இதுபற்றிக் கூறிய வார்த்தைகள் எதுகையில் ஒலித்தன. ''அல்ஸ்டர் தொடர்ந்து சண்டை (fight)யிடும்; அல்ஸ்டர் செய்வது சரியே'' (right).

1969ம் ஆண்டுக்குப் பின் தீவிரப்பட்ட இப்பிரச்னை, அரசியல், பிரிவினை வன்செயல்களில் சுமார் மூவாயிரம் உயிரைப் பலியெடுத்திருக்கிறது.

எங்கள் நாட்டுப் பிரச்னை மிகவும் வேறுபட்டது. கத்தோலிக்கர் வாழும் அயர்லாந்தில், பிரிட்டிஷ் மக்களின் மதத்தைத் தழுவும் புறட்டெஸ்தாந்திகள் வடபகுதியில் பெரும்பான்மை என்ற காரணத்தால், அப்பகுதியில் தங்கள் ஆதிக்கம் தொடர வேண்டுமென்ற ஏகாதிபத்தியப் பித்து, வட அயர்லாந்தைப் போட்டுச் சிப்பிலியாட்டுகிறது.

இலங்கை அயர்லாந்தைப் போல ஒரு தனி நாடு; இங்கும் ஒரு நெடுங்காலப் பிணக்கு வளர்ந்து வருகிறது; அயர்லாந்தில் ஒருநாட்டை இரண்டுபடுத்தியதற்கு இன்னொரு அரசு பொறுப்பாயிருக்கிறது; வரலாற்று ரீதியில் வளர்ந்த பிரச்னை அது.

இங்கு நாடு ஒன்றென்றாலும் ஒற்றை ஆட்சியில் நடைபெறும் கொடுமைகள் பிரிவினைக்குத் தூபமிட்டிருக்கின்றன; இதனைத்தவிர்க்க தக்க அரசியல் மாற்றம் தடைப்படுவதால் வட அயர்லாந்தில் நடைபெறும் வன்செயல்கள் இங்கும்தலை தூக்கியுள்ளன.

பிரச்னையில் இருநாடுகளிலும் பேதம் உண்டானாலும், அதனை அணுகும்வகையில் ஒற்றுமை உண்டு. பிரிட்டிஷ் ஆட்சியைப்போல் இங்கும் 'அழுங்குப்பிடி' அரசின் மனப் போக்கில் குடிகொண்டிருப்பதால் 'போர்' நிலை தோன்றியிருக்கிறது.

அங்கு 15வருடம் இந்தப் 'போர்நிலை' இங்கு ஐந்து வருடமாக பயங்கரவாத ஒழிப்பு - அதுவும் பூண்டோடு நடைபெறுகிறது.

பிரிட்டிஷ் பிரதமருக்கு அரசியல் ஆட்டத்தில் ஞானம் பிறந்திருக்கிறது. இங்கு எந்த வெற்றியைக் கருத்தில்கொண்டு வடபகுதியில் அட்டகாசங்கள் தொடரவேண்டும்?

தென்னிலங்கை மக்களுக்கு அரசு விடுப்பது ஒரு விதமான செய்தி; வடக்கில் இன்னொரு விதமான பிரசாரம்; வடபகுதிமக்கள் இன்றைய அபாயத்தில் இரட்சகர் வடக்கில்இருந்து வருவாரோ என எண்ணுமளவிற்கு இரண்டாட்டம் தொடர்கின்றது.

வெற்றி தோல்வி என்ற முடிவுக்கு இடமில்லாத இந்தக் கொடுமை நிலை ஒழிய உடனடியாக ஆயுதப் படையைத் திருப்பி அழைப்பது முதற்படியாகும்.

அபிவிருத்தியும் பயங்கரவாதமும் அழிவும் சமாதானப்படையும்!

அபிவிருத்தித் திட்டங்களுக்கு குறிப்பாக வடபகுதி அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு உபயோகப்படுத்துவதென்று அரசு தீர்மானித்திருக்கிறது.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு ஆயுதப்படையினருக்கு மேலும் அதிக அதிகாரங்கள் வழங்கவும் அரசு தயாராக இருக்கிறது.

எனவே இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வு காண்பது தான் அரசின் குறிக்கோள் என்பது தெளிவு.

மன்னார், வல்வெட்டித்துறை பருத்தித்துறை, மல்லாவி, வவனியா பஸ் பயணிகள் ஆகிய கொடூர சம்பவங்கள் இனியும் தொடரலாம்.

பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டியே தீருவேன் என்று ஜனாதிபதியும், தேசீய பந்தோபஸ்துஅமைச்சரும் சூளுரைத்து வருகிறார்கள்!

அரசின் பார்வையில் எல்லோருமே பயங்கரவாதிகளானால் அவர்கள் எல்லோரையுமே ஒழித்துக்கட்டுவதானால் வடபகுதியின் அபிவிருத்திக்கு எதற்காக நிதிஒதுக்கிவைக்க வேண்டும்?

நிதிஅமைச்சர் வெளியிட்ட கருத்து

சிலதினங்களுக்கு முன் நிதி அமைச்சர் ரொனி டி மெல் வென்னப்புவ என்ற இடத்தில் மக்கள் வங்கிக்கிளையொன்றைத் திறந்துவைத்து உரையாற்றுகையில், இலங்கைக்கு உதவியளிக்கவேண்டாமென்று இலங்கைக்கு உதவும் நாடுகளிடம் திரு. அ. அமிர்தலிங்கம் கோரியுள்ளதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இத்தகைய பிரச்சாரங்களில் ஈடுபடுவது தமக்குத் தெரியுமென்றும் ஆனால் திரு. அமிர்தலிங்கம் போன்ற ஒரு தலைவர் இத்தகையசெயலில் ஈடுபடுவார் என்று தாம் நம்பவில்லையென்றும் கருத்துவெளியிட்டிருந்தார்.

1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிதிஅமைச்சரின் இரண்டாவது வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தை எதிர்க்கட்சி சார்பில் முடித்து வைப்பதற்காக அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. அ. அமிர்தலிங்கம் பேசுவதற்கு எழுந்தார். சில தினங்களுக்கு முன்னர் தான் அவர் அமெரிக்காவுக்குச் சென்று திரும்பியிருந்தார். திரு. அமிர்தலிங்கம் பேசஎழுந்ததும் அரசாங்கக் கட்சியின் பின்ஆசன உறுப்பினர் ஒருவர் சென்னை 'இந்து' பத்திரிகைப் பிரதியொன்றைக் கையில் உயர்த்தியபடி திரு. அமிர்தலிங்கத்தின் பேட்டி இதில் வந்திருக்கிறதென்றும் இலங்கைக்கு உதவியளிக்கவேண்டாமென அவர் அமெரிக்க அரசைக்கேட்டாரென்றும்இதற்கு அவர் விளக்கம் தரவேண்டுமென்றும் உரத்தகுரலில் சத்தமிட்டார்.

அமிர் கொடுத்த விளக்கம்

அதற்கு விளக்கமளித்த திரு. அமிர்தலிங்கம் இரண்டேகால் மணி நேரம் பேசினார். இலங்கைக்கு அமெரிக்காவோ வேறு எந்த நாடோ உதவி அளிக்க வேண்டாமென்று தாம் கேட்கவில்லையென்றும் ஆனால் இலங்கைக்கு அளிக்கப்படும் உதவி தமிழ்மக்களுக்கும் தமிழ்ப் பகுதிகளுக்கும் பயன்படுத்தப் படுவதை உறுதிப்படுத்த வேண்டுமென்றே தாம் கேட்டதாகத் தெரிவித்தார்.

இப்போது வென்னப்புவையில நிதி அமைச்சர் தெரிவித்த கருத்துப் பற்றி பத்திரிகை நிருபர் ஒருவர் திரு. அமிர்தலிங்கத்திடம் கேட்ட போது தமிழர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு இலங்கைக்கு உதவும்நாடுகள் தான் இலங்கை அரசை வற்புறுத்தலாமென்றும் இதற்காக அந்நாடுகளிடம் நாம் நமது நிலையைத் தெரிவிக்கின்றோம் மென்றும் பதில் அளித்திருக்கிறார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பிசாசின் உதவியையும் பெறுவதற்கு இலங்கை குடியரசின் அதிபர் முன்வந்தால் பல விதத்திலும் பாதிக்கப்பட்டு அழிவின் விளிம்பில் அஞ்சிவாழும் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கஉதவி செய்யுங்கள் என்று இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகளிடம் தமிழர் தலைவர் ஒருவர் கேட்பது தவறாகுமா?

அவசரகால விதிகள் நீக்கம்

தெற்கில் இரண்டு தொகுதிகளுக்கு நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல் ஒழுங்கான முறையில் நடைபெறும் பொருட்டு வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அவசரகாலவிதிகளை விளக்கிக் கொள்ளத் தீர்மானித்திருப்பதாகத் தம்மைச் சந்தித்த நான்கு எதிர்க்கட்சித் தூதுக்குழுவிடம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா தெரிவித்திருக்கிறார்.

பட்டிருப்பு, திருமலை ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தலை இப்போது நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லை என்பதையும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் அவசரகாலநிலை அமுலிலிருந்தபோதுதான் நடத்தப்பட்டது. அப்படி இந்த இடைத்தேர்தல்களையும் நடத்துவதற்கு அரசு முன்வராதது பெரும் காரியம்!

வட்டமேசையும் இராணுவத் தீர்வும்

இலங்கையில் இனப்பிரச்னைக்குச் சுமுகமான, நிரந்தரமான தீர்வு காணும்முகமாக இந்தியப் பிரதமரின் நல்லுதவியுடன் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாடு, வட்டமேசை மாநாடாகிப் பல மாதங்களாக இழுபட்டுக் கொண்டிருக்கிறது. சென்ற கூட்டத்தின் போது விரைவில் ஒரு முடிவு ஏற்படலாமென்ற நம்பிக்கை பலர் மத்தியிலும் நிலவியது.

ஆனால்

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்திப்பதற்காக இவ்வாரம் இந்தியா சென்ற திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில், இலங்கையில் இனப்பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டுமென்பதில் இலங்கை அரசுக்கு உண்மையான ஆர்வம் இருப்பதாகத் தோன்றவில்லை என்று தெரிவித்திருக்கிறார். உண்மையான ஆர்வம் அரசுக்கு இருக்குமானால் இனப்பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆசிரியர்சங்கத் தலைவர்கருத்து

இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு ஜி.என். பர்னாந்து இனப்பிரச்னைக்கு சமாதானத தீர்வுகாண்பதற்கான நல்ல சூழ்நிலையைத் தோற்றுவிக்கவேண்டுமென்று கோரி சிலநல்ல யோசனைகளையும் வெளியிட்டிருக்கிறார்

''வட இலங்கையில் காரணமெதுவுமின்றி சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள், சாதாரண பிரஜைகள் வீதியிற் செல்லும் போது ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப் படுவதை நாம் கண்டிக்கிறோம். இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வொன்றை ஏற்படுத்த முடியாதென்பதை அரசாங்கமும் சிங்களமக்களும் உணர்ந்து கொள்ளவேண்டும். வடமாகாணப் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள இராணுவஅதிகாரியே, இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வு ஒன்று காணவேண்டுமென்று 'ரோய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளார்'' இவ்வாறு தெரிவித்துள்ள திரு. ஜி. என். பர்னாந்து ஒரு அரசியல் தீர்விற்கான வழிகாணும் வகையில் ''அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்தல், வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை வாபஸ் வாங்குத, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்தல் ''ஒரு நல்ல சூழ்நிலையைத் தோற்று விக்கும் என்று கூறுகிறார்.

இந்த யோசனைகள் யார் கண்ணில் படப்போகிறது; யார் காதில் விழப் போகிறது?

எத்தனையோ அரசமைப்பு சான்றுகள்

இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குப் பல்வேறு நாடுகளின் பிரச்னைகளையும் அவற்றுக்குக் காணப்பட்டதீர்வுகளையும் சான்றுகளாகக்காட்டி பல்வேறு அமைப்புக்களும் திரு. றெகன் பெரேரா திரு. எப். ஸி. பெரேரா, திரு. என். சண்முகதாசன் போன்றோர்களும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

அரசியல் தீர்வு காண்பதில் அக்கறையிருந்தால் இவை பரிசீலனை செய்யப்பட்டிருக்கும்.

இலங்கையின் இனப்

(5-ம் பக்கம் பார்க்க)

எஸ். எம். ஜி.

மக்கள் கருத்து

காவிஉடை நகைப்புக்குரியதா?

பருத்தித்துறையில் அண்மையில் நடைபெற்ற கலவரங்களால் இரண்டு பேர் உயிர்நீத்தார்கள். இவர்கள் குடும்பத்துக்கு உதவ இன்னுமொரு அன்பருடன் பலரைசந்தித்துப் பேசினோம். காலையில் நாங்கள் சாப்பிடவில்லை. காலை 11 மணியிருக்கும் தேனீர் பருகினால் சிறிது களைப்பு ஆறும் என்னும் நோக்கத்துடன் பருத்தித்துறையில் உள்ள தேநீர்கடைக்கு போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அங்கு இரு தமிழர்கள் ஒருமேசைக்குப் பக்கத்தில் இருந்து ஏதோ ஆகாரம் அருந்தியவர்கள், என்னைப் பார்த்து நகைத்தார்கள். காரணம் அவர்கள் காவிஉடையை கண்டதில்லைப்போலும்! வீடு விட்டு மக்களுக்கு சேவை செய்ய விரும்பும் மக்களுக்கு பெரிய புகழ்மாலை வேண்டாம் அவமதிப்பால் மற்றைய நல்ல தமிழர்களின் பண்பைகுறைக்கலாமா? இன்னுமொரு விடயத்தை இங்கு கூறுவது பொருந்தும். சில வீடுகளுக்கு போனபொழுது வீடியோபடம் போட்டு மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்த்த பொழுது எங்களுக்கு அழுகையாக வந்தது. மற்றவர்களின் கவலையை பகிர்ந்து வாழ பழகும் நாள் எப்போ வரும்!

சித்ரூபானந்தா
ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை

ஊர் வாய்

நக்கீரர்

கோயில்களின் முன்வீதிகள் மாலை வேளைகளில் 'பென்சன்' மாருக்கு நல்ல இடங்கள். அவர்களின் உத்தியோக பூர்வமற்ற சங்கக் கூட்டங்கள் அங்கே நடக்கும். அவ்விடங்களில் ஊர்வாய் மிகத் துரிதமாக இயங்குவதுண்டு. ஈரான், ஈராக் சண்டை துவக்கம் அண்டை அயல் சமாச்சாரங்கள் வரைக்கும் சகலதும் அலசி ஆராயப்படும். பெரும்பாலும் ஆத்மீக சிந்தனை அந்த இடத்தில் தணிக்கை செய்யப்பட்டிருக்கும்.

கடந்தவாரம் இப்படியான ஒருமகாநாடு நடந்துகொண்டிருந்தது. தலைவர் கோயில் மூலஸ்தானத்திற்கு முதுகைக் காட்டிக் கொண்டிருந்தார். அன்றைய விஷயமாக வாழ்க்கைச் செலவு எடுக்கப்பட்டது. கூட்டத்தில் வயதிற் குறைந்தவரான ஓர் ஓய்வுபெற்ற ஓவசியர் பேச்சை ஆரம்பித்தார். தனது ஐந்து பெண்பிள்ளைகளையும் ஆளுக்கொரு வீடுஉட்பட நல்ல சீதனங்களுடன் கட்டிக் கொடுத்துவிட்டு ஆறுவது வீட்டில் நிம்மதியாக தனது துணைவியுடனும் அவ்வப்போது தனது 10 பேரப்பிள்ளைகளுடனும் கொஞ்சிக் குலாவி வாழ்பவர் இவர்.

''அப்ப எனக்கு பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும். (அதாவது 60 வருடங்களுக்கு முன்னையகதை) பள்ளிக்கூடத்துக்குப் போகேக்கை அம்மா பத்துச் சதம் தந்துவிடுவா. ம்...பத்துச் சதம் மத்தியானச் சாப்பாட்டுக்கும். ம்... நான் அதுக்கு நாலுதோசை, சம்பல், கத்தரிக்காய்க்கறி, தேத்தண்ணி. இவ்வளவும் வாங்குவன் ம்... ''பிறகு ஒரு சதம் மிச்சமிருக்கும், வீட்டுக்குப் போகேக்கை இனிப்பு வாங்குவன்.. ம்...'' கோயில் பூசை மணி கேட்டது. இருந்தபடியே எல்லோரும் 'அப்பனே முருகா' என்றனர். கனம்தங்கிய தலைவர் அவர்களின் முதுகு இன்னமும் மூலஸ்தானம் பக்கம்தான். அடுத்த விஷயம் எடுக்கப்பட்டது. மூன்றுந் தெருவிலிருக்கும் பெரியவருடைய மகளைக் குடத்தனைப் பரியாரியிடம் கொண்டுபோன விஷயம் எடுக்கப்பட்டது.

(தணிக்கை)

வாழ்க்கைச் செலவு என்னும்போது மேலும் ஒரு கதை இருக்கிறது. இது நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் நடைபெற்றது. மாவட்ட நீதிபதியாகக் கடமைபுரிந்து ஓய்வு பெற்று இன்று சட்டத்தரணியாகத் தொழில் பார்க்கும் திரு. யோகநாதன் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிடிருந்த காலம். இவர் இரு நண்பர்களுடன் மருதானை புஹாரி ஹோட்டலுக்குப் போனாராம். கதையை அவரே சொல்லட்டும். ''அன்று சட்டக்கல்லூரியிலே விவாதப் போட்டியில் கலந்து கொண்ட காரணத்தினால் மூவரும் டை கட்டி இருந்தோம். இன்றுபோல் அன்றும்கூட 'டை கட்டி வாழ்வாரே வாழ்வார். மற்றெல்லாம் கைட்டிப் பின்செல்பவர்' என்றகிறளுக்கு மதிப்புக் கொடுத்திருந்தோம்.

எங்கள் மூவரிடமும் மொத்தமாக எவ்வளவு பணமிருக்கிறது என்று பார்த்தோம். அதன்படி படி ஆளுக்கு ஒரு வெறுந்தேநீர் குடித்தோம். சிகரெட் வாங்கப் பணம் இருக்கவில்லை. பணம் கட்டுவதற்காகக் காசாளரிடம் போய் மூவரும் நின்றோம். தேநீர் பரிமாறியவர் பில் தரவில்லை. இன்றும் பல இடங்களில் இருப்பது போல அன்றும் பரிமாறியவர் உரத்துக் கணக்கைக் கூறுவதுதான் வழக்கம். அப்படியே அவர், ''டை கட்டிய மூணு தொரைமார் வெறுந்தேத் தண்ணி மூணு ஆறு சாம்'' என்று பலமாகக் கூவினான்; எங்களுடைய டையும் களிசானும் கழன்று விழுவது போலிருந்தது. அந்தக் காலத்தில் செலவு குறைவாக இருந்தானும் டை கட்டிய சட்டக் கல்லூரி மாணவர்கள் மூன்று பேர் சேர்ந்து கட்டிய பில் ஆறு சதம் என்னுறபோது ஒரு மாதிரித்தானிருந்தது'' திரு. யோகநாதன் நல்ல நடிகர். இந்தக் கதையை நடித்துக் காண்பித்துக் கூறும்போது சுவாரஸ்சியமாக இருக்கும்; அவர் நடிகர் என்பது பலருக்குத் தெரியாது. ஈழத்திரைப் படமாகிய பொன்மணியிலே தாடி மீசையுடன் வந்து மந்திரவாதியாக நடித்தவர் இவரேதான்.

இளைஞர் இயக்கத்திடம்சிக்கிய கொள்ளை கோஷ்டி?

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களில் சிலரை தவிர ஏனையவர்களை ''ஓர் இளைஞர் இயக்கம்'' கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளதாம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ் இளைஞர் இயக்கத்தினர் குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட இருவரை மடக்கிப்பிடித்து விசாரணைசெய்ததாகவும்அவர்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியாகிய ரூபா 3391ஐ மீட்டுள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

இக் கொள்ளைச் சம்பவத்தில் மொத்தமாக ஐவர்ஈடுபட்டனரெனவும், ஏனைய மூவரைத் தேடும்படலம் தொடர்வதாகவும் தெரிகின்றது.

அத்துடன் சங்க நிர்வாகத்தினால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் 17,224 ரூபா70 சதம் கொள்ளையடிக்கப்படவில்லை என வும் இப்போது அறியப்படுகின்றது.

இதுவிடயம் தொடர்பாக, சாவகச்சேரிச்சங்கம் இப்போது விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற திணைத்தில்,காரியாலயத்தில் நடமாடியவர்களையும் ஆராய்ந்து வருகின்றதாம்.

வடக்கு சட்டத்தரணிகளின் உண்மையான விபரங்களை செயலாளர் கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் சட்டத்தரணிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களின் உண்மையான விபரங்களை அறிவிக்குமாறு ஸ்ரீலங்கா சட்டத்தரணிகள் சங்கச்செயலாளர்திரு டபிள்யூ பி.குணதிலகா கோரியுள்ளார்.

மல்லாகம் சட்டத்தரணி சங்க உறுப்பினர்சட்டத்தரணி க.குணரத்தினத்திற்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரியுள்ளார்.

''பத்திரிகைகளில் வடபகுதி சட்டத்தரணிகளைப் பாதிக்க கூடிய விஷயங்கள் நடந்துள்ளதாக குழப்பமான செய்திகள் வந்துள்ளதாகவும் உண்மையானநிலையினை தமக்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இடிந்து விழுந்து இயங்காமல் கிடந்த பாடசாலையில் நியமனம் பெற்ற ஆசிரியர்!

(கொழும்பு)

பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று தனது கடமையைப் பொறுப்பேற்பதற்கு குறிப்பிட்ட பாடசாலைக்கு ஆசிரியர் சென்ற போது பாடசாலை இயங்காத நிலையில் இருந்ததோடு பாடசாலைக் கட்டிடமும் முற்றாக இடிந்து வீழ்ந்த நிலையில் காணப்பட்டது.

நயினாதீவைச் சேர்ந்த செல்லத்துரை மணிவாசகம் என்பவருக்கே இத்தகைய புதுமையான அனுபவம் ஒன்று ஏற்பட்டது.

கலைத்துறைப் பட்டதாரிகளுக்கு அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரியநியமனங்களின் போது இவருக்கு களுத்துறை மாவட்டத்திலுள்ளஹொரணை என்னுமிடத்தில் அமைந்துள்ள சோரணை தமிழ் வித்தியாலயம் வழங்கப்பட்டது. இவர் தமது கடமையைப் பொறுப்பேற்பதற்காக கடந்த 10-ம் திகதி மேற்படி பாடசாலைக்கு சென்றாராம். றப்பர் தோட்டங்களின் மத்தியில் அமைந்துள்ள அப்பாடசாலையைச் சுற்றியுள்ள ஒருமைல் சுற்றளவில் எந்த மனித குடியிருப்புக்களுமே இருக்கவில்லை. பாடசாலைக் கட்டிடம் முற்றாக இடிந்து வீழ்ந்து கிடந்ததாம்.

கடந்த ஜூலைக்கலவரத்தில் இப்பாடசாலை இடித்து விழுத்தப்பட்டதற்குப் பிறகு திருத்தப் படவே இல்லையாம்.

அபிவிருத்தியும்..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைக்கு இராணுவத்தீர்வில் தான் அரசுக்கு ஆர்வமிருக்குமானால் வவனியா பஸ் பயணிகள் கொடூரச்சம்பவமும், மல்லாவி, சுன்னாகம், மன்னார், வல்வெட்டித்துறை பயங்கரச் சம்பவங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

சம்பவம் நடந்த உடனடியாகவே எந்தவித புலனாய்வும் மேற்கொள்வதற்கு முன்னரே இச்செயல்கள் ஆயுதப் படையினர் மீது பழி சுமத்துவதற்காக வடபகுதி பயங்கரவாதிகள் மேற்கொண்ட செயலாக இருக்கும்'' என்று அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுவார். இதை இலங்கை வானொலி பல தடவை ஒலிபரப்பும், ரூபவாஹினி தொலைக்காட்சியும் ஒளிபரப்பும்.

நிலைமை மேலும் மோசமாகி வடக்கில் தமிழ்மக்களின் படுகொலையைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்க உயர் அதிகாரிகள் கூறுவது போன்று பயங்கரவாதிகள் செயலிலிருந்தாவது மக்களைக் காப்பாற்றுவதற்கு ஐநா. சர்வதேசப் படை யொன்றை இங்கு அனுப்புவதற்கு மனிதாபிமானம் படைத்த நாடுகளும்மக்களும் முயற்சி செய்ய வேண்டியது அவசியம் அவசரமுமாகும்.

12 ஆசிரியர்கள் இடமாற்றம்

(கல்வியங்காடு)

12 ஆசிரியர்கள் யாழ். கல்வி மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதியில் கடமை புரிந்த ஆசிரியர்களில் மேலும் 12 ஆசிரியர்களின் பெயர் பட்டியல் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளது.

தற்சமயம் மொத்தமாக 163 ஆசிரியர்கள் யாழ். கல்வி மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

ஓய்வூதியம் பெற்றனர்

(ஊரெழு)

இதுவரைகாலமும் சுன்னாகம் அஞ்சல் அலுவலகத்திலிருந்து விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கானஇம் மாதஓய்வூதியப் பணம் சுன்னாகம் அஞ்சலகத்தில் வைத்தே வழங்கப்பட்டது. அஞ்சல்அதிபர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். கடந்த மாதமும் இவர்களுக்கான ஓய்வூதியப் பணம் மேற்படி அஞ்சலகத்திலேயே வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சுன்னாகம் அஞ்சலகத்திலிருந்துஓய்வூதியம் பெற்று வந்த சகலரும் அவர்களுக்கான இம் மாத ஓய்வூதியப்பணத்தைஇம் மாதம்21ம் திகதியும் 25ம்திகதிகளில் யாழ். துரையப்பாவிளையாட்டரங்கில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 27-ம் திகதிமுதல் அவசரகால விதிகள் தளர்த்தப்படுகின்றன!

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தின் பல விதிகள் வடக்கு கிழக்குத் தவிர்ந்த பகுதிகளில் தளர்த்தப்படுகிறது.

மின்னேரியா, குண்டசாலை ஆகிய தொகுதிகளுக்கு இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 27ம் திகதி ஏற்றுக்கொள்ளப்படுகிற நாளிலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகிற வரை, கூட்டங்கள், ஊர்வலம், துண்டுப்பிரசுரங்கள் விநியோகிப்பது போன்றவை தளர்த்தப்பட்டுள்ளது

இந்த அவசரகால விதிகள் தளர்த்தப்படுவது வடக்குப் பகுதிக்கும், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குப் பொருந்தாது.

நீண்ட காலப் பகை கொலையில் முடிந்தது!

கிளிநொச்சியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியைச் சேர்ந்த 55 வயதான ஆறுமுகம் சின்னையா என்பவர் படுகொலை செய்யப்பட்டார்!

யாழ். பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவருக்கும், இளைய தம்பி அல்லது சின்னப்பு என்பவர் குடும்பத்திற்கும் 2வருட காலமாக பகைமையிருந்ததாக விசாரணையில் கூறப்பட்டது.

இறந்தவரின் மகள் சின்னையா விமலா சாட்சியமளிக்கையில், 12ம் தேதி இரவு 12 மணிக்கு தந்தை வீட்டிலிருந்தபோது இளைய தம்பி கூப்பிட்டார் என்றும், தந்தை உள்ளேவரும்படிகூற இளைய தம்பியும், மகன் மணிவண்ணனும் உள்ளே வந்ததாகவும், பின் 'ஐயோ' 'ஐயோ' என்று சத்தம் கேட்டதாகவும் தெரிவித்தார்

விசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (க)

முரசுமோட்டையில் சிறுபோக வேளாண்மைக்கு தடை விதிப்பு?

(கிளிநொச்சி)

எதிர் வரும் ஆண்டில் முரசுமோட்டைப் பகுதியில் சிறுபோக வேளாண்மைக்கு தடை விதிக்கப் படவுள்ளது. இவ் ஆண்டில் முரசு மோட்டைப் பகுதியில் உள்ள வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்படுவதை முன்னிட்டுசிறுபோக வேளாண்மைக்கு தடைவிதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக முரசுமோட்டைப் பகுதிக்கான நீர்ப்பாசன வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்படாததால் இரணமடுக்குளத்திலிருந்து இப் பகுதிக்கு நீர்ப்பாய்ச்சுவதில் சிரமங்கள் ஏற்பட்டு வந்துள்ளது.

இதைக் கவனத்தில் கொண்டேஇவ்வாய்க்கால்களை திருத்தி அமைக்க நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் முன் வந்துள்ளனர்.

அதே வேளை சிறு போகவேளாண்மை தடைப்படுவதால் விவசாயிகள் பாதிப்படையாது இருப்பதை நோக்கமாக கொண்டு இவ் வாண்டு கால போகச் செய்கை முடிவடைந்தவுடன் உழுந்து போன்ற சிறுதானிய வகைகளை முரசுமோட்டை பகுதியில் பயிரிட நடவடிகை எடுக்குமாறும் இதற்கு ஆரம்ப நீர்ப்பாசன வசதி மட்டும் செய்து கொடுக்குமாறும் கிளிநொச்சி கமநல சேவைத்தலைவர் திரு.கே.பாரிகியநேசர் அரசாங்க அதிபர் திரு.என்.ஜெயநாதனைக் கோரியுள்ளார்.

நவம்பர்முதல் ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி தபாலகங்கள் மூலம் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு நவம்பர் மாதம் முதல் பனோ கூ.ச.கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்க முயற்சி எடுக்கப்படவுள்ளது.

முதலில்,வயோதிபர்கள் சுகவீனமுற்றவர்கள் சுமார் 150 பேருக்கு கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் படிப்படியாக மற்றவர்களுக்கும் கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் வழங்கப்படும். [க)

முக்கிய அறிவித்தல்

எனது மகன் செல்வன் இராசேந்திரனுக்கும் செல்வி சிவரஞ்சினிக்கும் நடந்தேறிய திருமணத்தின் காரணமாக 19-09-84 புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடாத்தவிருந்த வரவேற்புபசாரம் பின்போடப்பட்டுள்ளது.

தா. கந்தசாமி,
பங்காளர், சிறிலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(1823)

'யுனிசெவ்' திட்டம்:

வேலைகளைத் துரிதப்படுத்த புதிய நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ் மாநகர சபை எல்லைக்குள் நடக்கும் 'யுனிசெவ்' வேலைத் திட்டங்களை, அந்தந்தப் பகுதி 'சமூக அபிவிருத்தி குழுக்கள்' ஏற்றுச் செய்ய வேண்டும்'' என்று நேற்றுமுன் தினம் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ கே. சிவஞானம் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ் மாநகர சபை கமிட்டி அறையில் இக் கூட்டம் நடைபெற்றது.

வேலைகளைத் துரிதப்படுத்துவதற்காக இத்திட்டம் பல முகப் படுத்தப்பட்டிருப்பதாக ஆணையாளர் தெரிவித்தார்.

குழுக்கள், இத்திட்டம்பற்றி அந்தந்தப் பகுதி மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டுமென்றும், மக்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

கூட்டத்தில் இதுவரை நடந்த திட்ட வேலைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

எந்தெந்த இடங்களில் துரிதப்படுத்த வேண்டுமென்பதை ஆராய்ந்து அதற்கான வழி செய்ய வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது. (க)

''நாடு அமைதியிழந்து பயங்கர நிலையிலுள்ளது''

இ. தொ. கா. மகாநாட்டில் அமைச்சர் 'தொண்டா' உரை

[கொழும்பு]

''இன்று நாடு அமைதியிழந்து பெரும் நெருக்கடியை எதிர்நோக்கும் பயங்கர நிலையில் காணப்படுகிறது. இந்த நாட்டில் வாழும் இரு பெரும் இனங்கள் மத்தியிலும் காணப்படும் பரஸ்பரம் அவநம்பிக்கை அர்த்தமற்றவை என்பன இனப்பிரச்னையை சிக்கலாக்கியுள்ளன.''

இவ்வாறு இ. தொ. கா. தலைவரும், கிராமியத் தொழில் துறை அபிவிருத்தி அமைச்சருமான திரு எஸ். தொண்டமான் இ.தொ.காவின 28 வது வருடாந்த மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;- ''சில அரசியல் கட்சிகளும் இனப்பிரச்னையை காலத்துக்கு காலம் மேலும் சிக்கலாக்கியுள்ளன. இதனால்இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது மிகவும் கஷ்டமாகவுள்ளது.

''1977 ம் ஆண்டு ஐ.தே. கட்சி தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதாக கூறிய போதிலும் இதுவரை அப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படவில்லை. இதனால் தமிழ் மக்கள் தனி நாடு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்'' என்றார். [இ-சு]

மூடப்பட்ட வங்கி அலுவல்கள் பிராந்திய அலுவலகத்தில்!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற களுவாஞ்சிக்குடி இலங்கை வங்கிக் கொள்ளையடுத்து மூடப்பட்ட வாழைச்சேனை' செங்கலடி, காத்தான்குடி இலங்கை வங்கிக்கிளைகளின் கொடுக்கல் வாங்கல் தொடர்புகள் திருமலைவீதியிலுள்ள பிராந்திய அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி அலுவலகம் பொலிஸ் நிலையம் முன்பாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

யாழ். நூலகத்துக்கு நாகநாதன் குடும்பம் நூல்கள் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

அமரர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் குடும்பத்தினர் சுமார் 85 ஆயிரம் ரூபா பெறுமதியான, அரியநூல்களை யாழ் லயன்ஸ் கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

யாழ் லயன்ஸ் கழகம் இந்த நூல்களை யாழ் பொதுசன நூலகத்துக்கு வழங்கவுள்ளது.

வத்தளை லயன்ஸ் கழகத்துக் கூடாகவே டாக்டர் நாகநாதன் குடும்பத்தினர் யாழ். லயன் கழகத்துக்கு இந்தநூல்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

அன்பளிக்கப்பட்ட புத்தகங்களுள் சட்டம், பொருளாதாரம், விஞ்ஞானம் உட்பட கலைக்களஞ்சியத் தொகுதி [முழுப்பகுதியும்] ஆகியன அடங்கியுள்ளது

அடுத்தமாதம் யாழ் மாநகர ஆணையாளரிடம் வைபவரீதியாக வைத்து இந்த நூல்கள் கையளிக்கப்படவுள்ளன.

இவ் வைபவத்தில், டாக்டர் நாகநாதனின் மனைவியும் பிள்ளைகளும், வத்தளை லயன்ஸ் கழகம் யாழ் லயன்ஸ் கழகங்களின் பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள். [மா]

உன்னதமான தொனி. நம்பமுடியாத சேமிப்பு.

ஆமாம் டெலிபன்கன் ஸ்டீரியோ டி. வி. தரும் நம்பமுடியாத சேமிப்பு.

உள்ளமைந்த வோல்டேஜ் சீராக்கி. 75-290 வோல்ட் வரை

ஏனெனில் ஒரு டெலிபன்கன் ஸ்டீரியோ டி.வி. யைக் கொள்வனவு செய்யின் உங்களது ஒலிச் சாதனத்துக்கு ஆம்ப்ளிபயர் ஒன்றை வாங்கத் தேவையில்லை. கசட் டெக் கை அல்லது ரெக்கோர்ட் பிளேயரை டெலிபன்கன் ஸ்டீரியோ டி.வி. யுடன் இணைத்துவிட்டால் போதும், 20-60 வோல்ட் வரையிலான உன்னதமான தொனியைப் பெறலாம். அதாவது உங்கள் ஒலிச்சாதனத்திற்கென ஆம்ப்ளிபயர் ஒன்றை வாங்கி மேலதிக பணத்தைச் செலவிடத் தேவையில்லை நம்பமுடியவில்லையா?

எமது காட்சியறைக்கு ஒரு முறை வருகை தாருங்கள் கணீர் என்று முழங்கும் இனிய நாதம் ஸ்டீரியோ மூலம் உயிர்பெற்று எழும் விநோதத்தைப் பாருங்கள்.

இன்றே ஒரு ஸ்டீரியோ டி.வி. யை உங்கள் இல்லத்திற்கு எடுத்துச் செல்லுங்கள் உங்கள் இல்லத்தில் ஓர் அரங்கேற்றமே நடத்தி மகிழுங்கள்.



நேரடியாக மேற்கு ஜேர்மனியிலிருந்து.

கையிருப்பு மாதிரி

அளவு	மாடல் இல.	ரூபா
கையிருப்பு மாதிரி		
14''	2066	10,150/-
16''	3006	12,975/-
20''	5016	13,875/-
22''	6016	16,725/-
27''	8016	17,700/-
தொலைக்கட்டுப்பாடு		
14''	2206	12,075/-
20''	5216	15,350/-
20''	1320	15,900/-
22''	6216	17,450/-
27''	8236	19,925/-
27''	8256	19,925/-
ஸ்டீரியோ - தொலைக் கட்டுப்பாடு		
18''	4296	18,900/-
20''	5296	19,975/-
22''	1440	21,900/-
27''	1540	24,875/-
27''	1550	26,490/-
27''	1560	26,490/-
27''	1590	29,925/-

TELE FUN KEN

டெலிபன்கன்

இலங்கையில் விற்பனையாகும் மேற்கு ஜேர்மனியின் தயாரிப்புகளில் முதன்மையானது

காட்சியறை: 467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

யாழ்ப்பாணம் - மகாராஜா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டெட், கே.கே.எஸ். வீதி.

கண்டி - மகாராஜா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டெட், 78, இராஜ வீதி.

முபாரக் ஸ்டோர்ஸ் - திருகோணமலை. நியு மொகிடீன் ஸ்டோர்ஸ் - காத்தான்குடி.

கெனடேயா லிமிட்டெட் - யாழ்ப்பாணம். கிருஷ்ணா - தெல்லிப்பளை. சேகர் இலெக்ரோனிக் கொம்பனிலெக்ஸ் - நெல்லியடி, டெலிகோனர் - சாவகச்சேரி/கிளிநொச்சி, சீ.எஸ். சுலைமான் - மன்னார், ராஜ் எம்போரியம் - வவுனியா. சீ. பீ. மொகமட் - அனுராதபுரம். துஷாராஸ் - அனுராதபுரம். நியு கண்டி ஸ்டோர்ஸ் - புத்தளம். நிகம்பு ரேடர்ஸ் - நீர்கொழும்பு, ஷம்பா ஸ்டோர்ஸ் - கண்டி குணசேகர அன்ட் கோ - மாத்தளை, பன்னி மகால் - நாவலப்பிட்டி பன்னி கவுஸ் - கம்பளை. M.P.C.S. - பண்டாரவளை V. தங்கசாமி நாடார் - தலவக்கலை அம்பிகா யுவலர்ஸ் அட்டன். வேல் அழகன் ஸ்டோர்ஸ் திருகோணமலை.

GARADS

மின்னேரி குண்டசாலை அக். 25ல்!

(கொழும்பு)

மின்னேரியா, குண்டசாலை ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தல், அக்டோபர் மாதம் 25 ம் திகதி நடக்கவுள்ளது.

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-மஞ்சுளா
உத்தமன்

சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30,
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
ஒருதாய்மக்கள்
— புதிய பிரதி —

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சுந்தாரராஜன் —
ஏ. வி. எம். ராஜன்
ஜெயலலிதா
மேஜர் சந்திரகாந்த்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 6-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா-நம்பியார்
அரசகட்டளை
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி.

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரஜனி காந்த்
தில்லு முல்லு
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - கே.ஆர்.விஜயா
தவப்புதல்வன்
(புதிய பிரதி)

வின்ஸர் [யாழ்.]
19—21
தினசரி 10-30, 2-00, 4-30
Charles Bronson
in
AVALANCHE
EXPRESS
(Colour - Action Packed)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் - ராதிகா
நாகேஷ்
ரத்தத்தின் ரத்தமே
(புதியபிரதி - ஈஸ்மன்கலர்)

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
சுபதினம்
21 - 9 - 84 முதல்
THE BURNING
வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45,
20-9-84 வரை
நீடிக்கப்பட்டுள்ளது.
TEN
(Adults only)

21 - 9 -84 முதல்
ஞான ஒளி

சம்பள உயர்வு வழங்குமாறு 17 தொழிற்சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

அரச, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்கள் அனைவருக்கும் ஐம்பதுசதவீத சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு 17தொழிற்சங்கங்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

எந்தவொரு ஊழியருக்கும் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத சம்பளம் இருக்க வேண்டுமென்றும் இத் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

கிளிநொச்சி செய்திகள்

ஆவணி ஞாயிறு விழா

''நாம் எதற்கும் பயப்படத் தேவையில்லை. எம்மை வழி நடத்திச் செல்ல இறைவன் இருக்கிறார். நம்மத்தியில் இருக்கும் இருள் நீங்கி ஒளி பரவ எல்லோர் வாழ்வும் சிறப்படைய கிருஷ்ண பரமாத்மா தமக்கு துணையிருப்பார்.

இவ்வாறு கிளிநொச்சி கிருஷ்ணன் ஆலயத்தில் நடைபெற்ற ஆவணி ஞாயிறு தின விழாவில்கலந்துகொண்டுசிறப்புரையாற்றுகையில்கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு என். ஜெயநாதன் குறிப்பிட்டார்.

கிருஷ்ணன் ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு. நா. சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

சுழியில் சிக்கி சிறுவன் மரணம்

கல்மடுக்குளத்தில் நீராடிய 15 வயதுடைய சிறுவன் நீர்ச் சுழியால் சிக்கி மரணத்தை தழுவிக்கொண்டான்.

கல்மடுநகர் சர்வோதயப் பண்ணையைச் சேர்ந்த கந்தசாமி லோகேஸ்வரன் என்பரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார்.

சாட்சிகளை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. என். இராசசேகரன் ஆஜர் செய்தார்.

பிரேத பரிசோதனையை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி திரு, பி. நவரத்தினராசா நடத்தினர்.

மரணமானவரின் மாமன் திரு. க. விக்னேஸ்வரனும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து விபத்து மரணம் என மரணவிசாரணை அதிகாரி திரு. யோகலிங்கம் தீர்ப்பு வழங்கினர்.

நஞ்சருந்தி இளம் பெண் தற்கொலை

தோட்டத்திற்குச் சென்று கத்திரிக்காய் ஆயுமாறு தந்தை கூறவே அவ்வாறு செய்யாது வேறு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மகளை தந்தை கண்டிக்கவே கிருமிநாசினி அருந்தி மரணமானர்.

கோனுவில் கிராமத்தில் வசித்து வந்த சின்னையா இந்திராணி (19 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. எஸ். இராசசேகரன் ஆஜர் செய்தார்.

பிரேத பரிசோதனையை அக்கராயன் ஆஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரி திரு. எம். என். சிறீஸ்கந்தராசா நடத்தினர்.

மரணமானவரின் தந்தை திரு. எஸ், சின்னையாவும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது.

ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டுவளம் கொழும்பு அரும் பொருட்காட்சி சாலை [தமிழ்]
5-35 கிரேட்ஸ்பேஸ் கோஸ்ரர் [ஆங்கிலம்]
6-00 விஞ்ஞான நிகழ்ச்சி (சிங்களம்)
6-30 தேகாரோக்கிய நிகழ்ச்சி [சிங்களம்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 தகவல் நிகழ்ச்சி [தமிழ்]
7-45 அதிகாரப்பரவலாக்கல் ஒரு கலந்துரையாடல் (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 டீ டேய் திரைப்படம் [ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள்முடிவு

செல்லையா சுவாமிகள்

தூய பிரமச்சரியம், ஆத்மீக வழியில் நாட்டம், கெட்டியான இறைபக்தி சுடர்விடும்சோதிட ஞானம் ஒருங்கேயமையப் பெற்றவர்தான் தென்புலோலி தந்த பழவடியார் செல்லையா அவர்கள். காலையிலெழுந்து வல்லிபுரம் குருக்கட்டிலமைந்த கேணியில் நீராடி, சித்தி விநாயகரை வணங்கி, பின்னர் வல்லிபுர சுவாமியின் சந்நிதி சென்று தன் பிரார்த்தனையை முடிப்பதில் வேளைதவறாமல் இருந்து வாழ்ந்தார். ஆண்டு தோறும் கதிர்காமப் பெரும் பதிக்குப் பாதயாத்திரை செய்வதையும் இறுதிமூச்சுவரை கைவிடாமல் வாழ்ந்து, இறையடி சேர்ந்த சுவாமிகளுடைய நினைவுநாள் நேற்று இடம் பெற்றது.

நான்குமுழ வேட்டி இடுப்பிலே, தோளிலே ஓர்துண்டு உயர்ந்த நெட்டையான தோற்றம், பொதுநிறம் புன்சிரிப்புடன் கூடியமுகபாவம் தர்க்கித்தலிலே தனித்துவமான போக்கு, எதையும் ஆற அமரயோசிக்கும் பண்பு இத்தனையும் நிறைந்தவர். பல விதமான அன்பர்கள் இவரைச் சூழ்ந்திருப்பர் தன்னிடம் வருமடியார்களை உபசாரம் பண்ணிக் கனம் பண்ணுவதில் இவர் தனிமனிதன்.

அன்பர்

மட்டு.

நீர்ப்பாசன இலாகாவில் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நீர்ப்பாசன இலாகாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 6 தட்டச்சு யந்திரங்கள் ஒரு ரேணியோ இயந்திரம் என்பன இனம் தெரியாத இரண்டு இளைஞர்களினால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

இந்த இளைஞர்கள் அங்கு காவலுக்கு இருந்த இரண்டு காவலாளிகளையும் வேறு இரண்டு சாரதிகளையும் கட்டி வைத்து விட்டு இக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் திருடர்கள் தொல்லை!

(புலோலி)

அல்வாய் தெற்கு ஓடைக் குறிஞ்சி ஆனைப்பந்தி ஆகிய பகுதிகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் வீட்டு உரிமையாளர்கள் ஆழ்ந்த நித்திரையிலிருக்க வீட்டினுள் புகுந்து கொள்ளும் இத் திருட்டுக் கோஷ்டியினர் வீட்டுப் பாவனைப் பொருட்கள், சைக்கிள்கள் ஆடுமாடுகள் கோழிகள் விவசாயப் பொருட்கள் என்பனவற்றைத் திருடிச்சென்று விடுகின்றனராம். இதனைத் தடுப்பதில் இளைஞர்கள் ஊர் காவல் தொண்டர்களாக இரவில் சேவையாற்றி வருகின்றனர்

இன்று யாழ்ப்பாணத்தில் மல்லிகை 20வது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

'மல்லிகை' சஞ்சிகையின் இருபதாவது ஆண்டு விழா இன்று புதன்கிழமைமாலை மல்லிகை அலுவலகத்தில் நடக்கவிருக்கிறது.

சிரித்திரன், ஆசிரியர் திரு. சி.சிவஞானசுந்தரம் (சுந்தர்) தலைமையில் இவ் விழா நடக்கவுள்ளது.

120 பக்கங்களைக் கொண்ட மல்லிகை ஆண்டு மலரில் ஈழத்து, தமிழகத்து, பிரபல எழுத்தாளர்கள் ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. பிரபல தமிழக ஓவியர் அமுதோனின் முகப்பு ஓவியம் மல்லிகையை அலங்கரிப்பது குறிப்பிடத்தக்கது.

நீலபத்மநாதன், ராஜகிருஷ்ணன், அசோகமித்திரன், தி.க.சி, துறவி ஆகிய தமிழக எழுத்தாளர்களின் ஆக்கங்கள் மலரில் இடம்பெற்றுள்ளன.

இவ் விழாவில் இலக்கிய அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அழைப்பு விடுத்துள்ளார்.

இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—3 (19-9-1984)
வாரம்— புதன்
திதி—நவமி இரவு 9-20வரை
நக்ஷத்திரம் — திருவாதிரை இரவு7-45வரை

மேடம்:- பொருள் வரவில் புதிய திருப்பம் ஏற்படும் முதல் விட்டு செய்யும் தொழில் முன்னேற்றத்தை குறிக்கிறது. வெளியிடத்தில் இருந்து மகிழ்ச்சி கரமான செய்தியொன்றும் கிடைக்கும்.

இடபம்:- சிறிய விடயத்துக்குக் கூட அதிக ஆத்திரம் ஏற்படலாம் பல வழிகளில் பணம் செலவாகும் நண்பர்கள் ஒருவர் உம்மை ஏமாற்ற முனைவார் சிலர் அவப்பெயருக்கும் இலக்காகலாம்.

மிதுனம்:- இன்று உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம் வாய்வுப்பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும் கடமையாற்றுமிடத்தில் சதி வேலைகள் நடக்கக்கூடும்.

கடகம்:-கொடுத்த வாக்குறுயை காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள் மற்றவர்களின் ஏழனப் பார்வைக்கும் இலக்காகலாம் பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்யாக இருக்க வேண்டும்.

சிங்கம்:- பிரச்சினைகள் பல வந்து குவியும் எதிலும் நல்ல முடிவை எடுக்க முடியாது திகைப்பீர்கள் சகோதரி ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கன்னி:- விலை பொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு தாய்வழித்தனமும் தாராளமாக கிடைக்கும் எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை உருவாக்குவீர்கள்

துலாம்:- புத்திசூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலை தூக்கும் புத்திரர்களாலும் புகழும் கிடைக்கும் இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும்.

விருச்சிகம்:- ஏமாற்றத்தின் அறிகுறிகள் காணப்படும் பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை உருவாகலாம் நாவடக்கம் வேண்டும்.

தனுசு:- களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும் நீண்ட பகை இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு காதலர் வாழ்கையில் பிணைப்புகள் இறுகும்.

மகரம்:- சிறிய விடயம் கூட இன்றுசிரமமாகத் தோன்றும் உள் வீட்டிலேயே பூசல்கள் தலை தூக்கும் வாய்வுப் பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும்.

கும்பம்:- தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும் தெய்வ நம்பிக்கை மேலிடும் நினைத்ததை சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

மீனம்;- தொழில் துறையில் எதிர்பரப்பாத நஷ்டத்திற்கிடமுண்டு புதிய முதலீடுகள் இன்றஒத்திவைக்கவும் நண்பர் ஒருவரின் கடிதம் வேதனையைத் தரலாம் மனத்திடம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

'பாஞ்சாலி சபதம்'

(கொழும்பு)

இலங்கையின் பிரபல வில்லிசைக்கலைஞர் முத்தமிழ் கலாரத்தினம், கட்டைப்பிராய் சபாசதாசிவம் கடந்த திங்கட்கிழமை இரவு ரூபவாஹினியில் 'பாஞ்சாலி சபதம்'என்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நடாத்தினர் இவரின்அம்பிகை வில்லுப்பாட்டுக் குழுவினர் நடத்திய இந்நிகழ்ச்சியை பி.விக்கினேஸ்வரன் தயாரித்திருந்தார்.

சுவரொட்டிகள்

(கல்லியங்காடு)

''மறைமுகமாகஇயங்கிவந்த நாம் இனிமேல் வெளிப்படையாக இயங்குவோம்'' ''இஸ்லாமிய மக்கள் ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்''என்றும் கூறும் வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் யாழ்நகரில்நேற்று முன்தினம் ஒட்டப்பட்டிருந்தன.

''இஸ்லாமிய எதிரொலி இயக்கம்'' இதனை ஒட்டியுள்ளது.

குண்டுக்குப் பலியான

இளம் கர்ப்பிணியின் பிரேத பரிசோதனை!

(யாழ்ப்பாணம்)

கரணவாயில் குண்டுக்குப் பலியான 19 வயதான கர்ப்பிணி கலாவதியின் பிரேத பரிசோதனை யாழ் அரசினர் ஆஸ்பத்திரி சவச்சாலையில் நடைபெற்றது.

பருத்தித்துறை நீதவானின் உத்தரவைத் தொடர்ந்து சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் ஆஸ்பத்திரிக்கு வந்து பார்வையிட்டார்.

இறந்த பெண்ணின் மைத்துனரான த.செல்லத்துரை சடலத்தை அடையாளம் காட்டினார்.

சடலத்தைச் சொந்த ஊருக்கு கொண்டு செல்வதற்கு ஏற்பட்ட தாமதத்தை அரசாங்க அதிபர் திரு பஞ்சலிங்கம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நீக்கி வைத்தார். (க)

எம். ஜி. ஆர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் ''இலங்கைத் தமிழர் பிரச்னையில் நாம் தற்போது பொறுமையாகஇருந்து வருகிறோம் ஆனால் காலம் வரும்போது தமிழர்கள் யாரென்று காட்டினால் அதன் விளைவுகளைத் தாங்கிக்கொள்ள முடியாது என்றார்.

இராஜராஜசோழன் சிலையை தஞ்சைப் பெரிய கோவிலினுள் வைப்பதற்கு அனுமதியளித்ததற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு அவர் நன்றிதெரிவித்தார்

பிரபல...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மான வானில் வந்த இனந்தெரியாத 15 நபர்கள் மேற்படி மாணவனை வீட்டில் வைத்து கடத்திச் சென்று விட்டதாகத் தெரிகிறது.

கடத்தியவர்கள் ஒரு தீவிரவாத இயக்கத்தின் பெயரைக் குறிப்பிட்டனராம்.

பொதுப்பரீட்சை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் ஒரு சில பாடசாலைகளை ஒன்றுகூடி சில தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆயினும் இங்கு எம்மால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஏனைய பாடசாலைகளது ஆதரவு தெரிவிக்கப்படும் என்ற அடிப்படையில் இம் முடிவுகளை முன் வைக்கின்றோம்.

''10 - 9 - 84ல் நடைபெற இருந்த எதிர்ப்பு நடவடிக்கையை வேறு ஒரு திகதியில் மேற்கொள்ளல், பல பெற்றார்களின் வேண்டுகோளிற்காகவும், எமதும், எதிர்கால சந்ததியினரினதும், கல்விநலம் குறித்தும், இறுதியாக திட்டமிட்டபடி அரசப் பொதுப் பரீட்சைகள் நடைபெற வுள்ள காரணங்களினால் டிசம்பர் வரை பகிஷ்கரிப்பு நடவடிக்கையை பின்போடல், பகிஷ்கரிப்பிற்கான கட்டாயம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதற்கு பூரண ஆதரவளித்தல், பகிஷ்கரிப்பு என்ற போர்வையில்வெளியாரின் எவ்வித தலையீட்டினையும் தடுத்தலும், சம்பந்தப்பட்டவர்களை பிரதிநிதிகள் குழு மூலம் கேட்டல் எமது சுயமான, நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்புகளுமின்றியும் நடந்துகொள்ளுமாறு சக அமைப்புக்கள்; இயக்கங்கள், குழுக்கள் போன்றவற்றைக் கேட்டல், எந்தவொரு பாடசாலையினதும் பாரம்பரியம், ஒழுங்கு, கட்டுப்பாடு, நன்மதிப்பு போன்றவற்றிற்கு உத்தரவாதமளித்தல் வடமராட்சி பாடசாலையின் மாணவப்பிரதிநிதிகளை எமது பிரதிநிதிக்குழுவுடன் சேர்த்தல்.

''இம்முடிவுகட்கும், கோரிக்கைகட்கும் ஆதரவுதரும்படியும், எங்கள் மாணவ அமைப்பினது வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு தருப்படி அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

''இறுதியாக 31-08-1984 அன்று நடைபெற்ற பகிஷ்கரிப்பு மாத்திரம் எமது பிரதிநிதிக்குழுவால் நடாத்தப்பட்டது. ஏனையவற்றிற்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை. அத்துடன் 24-09-84—29-9-84 வரை ஒரு நூலக வாரத்தை நடாத்துவதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் சகல விபரங்களும் 28-9-84க்கு முன் சகல பாடசாலை பிரதிநிதிகள் குழுவின் பிரதிநிதிகட்கும் அறிவிக்கப்படும்.'' (மா)

மாங்குளத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தப்பட்டு முல்லைத்தீவு நோக்கித் திசைதிருப்பப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

திசைதிருப்பப்பட்ட இடத்திலிருந்து சுமார் 13 மைல்கள் தூரத்திலுள்ள இடமொன்றில் மிகவும் மெதுவாகவே கொண்டு செல்லப்பட்டு இப் பஸ் வண்டி நிறுத்தப்பட்டதாகப் பிரயாணிகள் தெரிவித்தனர்.

வழியில் காணப்பட்ட பாலங்களை மிகவும் அவதானமாகவே அப்பஸ்வண்டி கடந்ததாகவும், அதில் வந்த சிலர் பாலங்கள் அணுகிய போது கீழிறங்கி அவற்றை நன்கு அவதானித்த பின்னரே பஸ் வண்டியைக் கடப்பதற்கு அனுமதித்தனர் என்றும் அதன் சாரதி கூறினார்.

மாங்குளத்தில் பஸ்வண்டி திசை திருப்பப்பட்ட போது ஒரு பெண் உட்பட 17 பயணிகள் அதில் இருந்தனர். அவர்கள் அனைவரும் மாங்குளத்தில் வைத்து பஸ்ஸில் ஏறியவர்களால் பின் இருக்கைகளிலே சென்று அமரும்படி கேட்கப்பட்டனராம்.

முல்லைத்தீவு வீதியில் மாங்குளத்தில் ஏறிய சிலரை இறக்கியபின்னர், அவர்களில் எஞ்சியோரை மீண்டும் மாங்குளத்தில் அவர்கள் ஏறிய இடத்திலேயே அப்பஸ்வண்டி இறக்கிவிட்டு, யாழ்ப்பாணம் நோக்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தது.

நேற்று இரவு 8-10 மணியளவிலேயே அப் பஸ் வண்டி யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது (கி)

இப்படியும் நடக்கிறது

அந்த ஊரில் சிறப்பாக இயங்கிவரும் ஒரு இளைஞர் முன்னேற்ற மன்றம் ஏற்பாடு செய்து நடத்திய தனது மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவில், அவ்வூர் கிராம சேவை அலுவலர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தார்.

''இப்பொழுது பல கிராமங்களில் அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தி, கொள்ளைகள் போன்ற வெவ்வேறு சமூக விரோதச் செயல்களை பூண்டோடு ஒழிக்க வேண்டும். இவ்விதமான விஷயங்களைக் கவனித்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு இன்றைய இளைஞர்களுக்கே உரியது.....'' என்று சொல்லிக்கொண்டிருந்த பொழுது. யாரும் எதிர்பார்த்திராத ஒரு சம்பவம் நடந்தது.

அந்த ஊரில் கசிப்பு விற்பனையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த ஒருவர், தான் வைத்திருந்த கசிப்பு போத்தல்களையும், அளவு கருவிகளையும் கிராமசேவை அலுவலர் முன்னிலையில் வைத்து, இனிமேல் இப்படியான செயல்களில் ஈடுபடப் போவதில்லை என்று பலர் முன்னிலையிலும் பகிரங்கமாக சபதம்-சத்தியம் செய்து கொண்டார்! இது நடந்த இடம்; ஊரெழு.

★ ★ ★

சில்லாலைப் பகுதியில் இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி நிதி திரட்ட வந்த வாலிபர்கள் மூவர், சில வீடுகளுக்குச் சென்று ஆத்திர மூட்டும் வகையில் வார்த்தைப் பிரயோகம் செய்து நிதி திரட்டியது பற்றி பரபரப்பாகவும் வேதனையுடனும் பேசப்படுகின்றது!

இவர்கள் சில வீடுகளில் அவர்களின் சொந்த விவகாரங்கள் பற்றி எல்லாம் சொன்னார்களாம்!

ஒரு வீட்டில், ''உங்களுக்கு பிள்ளையே இல்லை! யாருக்காக பணம் சேர்க்கிறீர்கள்?'' என்றார்களாம். இன்னொரு வீட்டில், ''உங்கள் சீதனக் காணியை விற்று எமக்கு பணம் தந்தால் என்ன?'' என்று கேட்டார்களாம், பல வீடுகளில் 500 ரூபா கட்டாயம் தரவேண்டும் என்று கண்டிப்பாகவும் வற்புறுத்தியுள்ளனராம்!

– ஊடுருவி

யாழ். செயலகத்தில் நடந்த கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திலுள்ள மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலக அறையொன்றிலிருந்து ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பிரதிபண்ணும் [போட்டோஸ்ரட்] இரு இயந்திரங்கள் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 8-30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

வானொன்றில் வந்த இனந்தெரியாத 6 நபர்களில் நால்வர் துப்பாக்கிகளுடன் பதிவாளர் அலுவலகப் பகுதியிலுள்ள இருட்டறைக்குள் புகுந்து அங்கு கடமையிலிருந்த ஊழியர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி விட்டு, மேற்படி இரு இயந்திரங்களையும், 75 'றீம்' கொண்ட பேப்பர் கட்டுகளையும், பிறின் பண்ணும் மைப்போத்தல்களையும் கொள்ளை அடித்துச் சென்றதாகப் யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

அமிர். சிவா..,

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அமிர்தலிங்கம் நேற்று கொழும்பு திரும்பினார்.

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து தற்போது இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களைத் தாம்எடுத்துக் கூறியதாகவும் தம்முடன் திருமு சிவசிதப்பரம் திரு ஆர் சம்பந்தர் ஆகியோரும் திருமதி காந்தியைச் சந்தித்ததாகவும் திரு அமிர்தலிங்கம் கூறினார்.

புதுடில்லியில் திரு ஜி பார்த்தசாரதி உட்பட வேறு பல இந்திய உயரதிகாரிகளுடன் இலங்கைத் தமிழர் நிலை குறித்துத் தா பேசியதாகவு அவர் தெரிவித்தார். ( )

முன்னாள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரபல சமூகத்தொண்டரும் தமிழ்க்காங்கிரஸ் வாதியுமான அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று கந்தரோடையில் நடைபெறும்.

கொழும்பில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளன.

கொழும்பு மாநகரசபைப் பகுதிகளிலும், சுற்று வட்டாரத்தில் குறிப்பாக கேந்திர ஸ்தானங்களிலும் பந்தோபஸ்து நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

அரசியல்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ருந்து வாபஸ் பெறவேண்டும்.

''அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும்.''

இத்தீர்மானத்தை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும்,இலங்கைசட்டத்தரணிகள் சங்கத்திற்கும் அனுப்புவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இத்தீர்மானங்கள் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக யாழ். சட்ட நூலகத்தில் அக்டோபர் 11-ம் திகதி மீண்டும் கூடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

வவனியா, முல்லைத்தீவு, மன்னார் சட்டத்தரணிகள் போக்குவரத்து வசதியீனம் காரணமாக வராத போதிலும், இவர்களின் ஒத்தாசையுடன் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரண அறிவித்தல்

திருமதி சின்னம்மா கிருஷ்ணர்

அம்பனை, தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி சின்னம்மா காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்ற கிருஷ்ணரின் அன்பு மனைவியும், சண்முகரத்தினம், சண்முகவல்லி, ஜெகதீசன், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், இராசலிங்கம், கந்தசாமி, குலமணிதேவி, வத்சலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-09-84 புதன்கிழமை மாலை 2 மணிக்கு மயிலங்கூடல் கருகம்பனையில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

1828

மரண அறிவித்தல்

எஸ்.எஸ். நவரெத்தினம் (மைனர்)

தோற்றம்: 28 9- 1919 மறைவு: 15-9 1984



முன்னைநாள் யாழ். மாநகர பிதா திரு எஸ். எஸ். நவரெத்தினம் (மைனர்) காலமானார். இவர்காலஞ்சென்ற சதாசிவம் பிள்ளை, தெய்வானைப் பிள்ளையின் இளைய புதல்வரும், மதியாபரணத்தின் அன்புக் கணவரும், சத்தியலெட்சுமி, இலட்சுமிகாந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீநிவாசன் (பிரான்ஸ்), குணாளன் (கிழக்கு ஜெர்மனி), சாவித்திரி, சிவபாலன் (பிரான்ஸ்), சிவகுமாரன் (பிரான்ஸ்), சிவநேசன் (மேற்கு ஜெர்மனி), சத்தியசிவசொரூபினி (யாழ். இரமநாதன் அக்கடமி), சிவானந்தன், சத்தியசீலன், சத்தியபாமா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஈஸ்வரலிங்கம் (யாழ். மாநகர நீர்வேலைப் பகுதி மேற்பார்வையாளர்) இன் மாமனாரும், கண்மணிஅம்மாள், குணரெத்தினம், பொன்மணிஅம்மாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வரெத்தினம், குணமணி ஆகியோரின் மைத்துனரும், சத்தியபிரபா, மதியழகன், அறிவழகன், சாந்தபிரபா, ஸ்ரீபிரபா ஆகியோரின் பேரனுமாவார் அன்னாரின் ஈமக்கிரியை இன்று (19-9-84) மாலை 2-30 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை, சுன்னாகம்.

1825

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.